# சைவ சித்தாந்தம் கூறும் மும்மலம்

ந.சுபராஜ்
முதுநிலை விரிவுரையாளர்

இந்து சமயப் பிரிவுகளுள் சைவம் பிரதானமானது. சிவனை முழுமுதலாகப் போற்றி வழிபடும் நெறியாக இது அமைகின்றது. சைவ சமயம் தொடர்பான கருத்துக்களைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து பெற்ற முடிபே சைவ சித்தாந்தம் என அழைக்கப்படுகின்றது. சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை முப்பொருளுண்மையினைச் சாதித்தலாகும். அவை பதி, பசு, பாசம் எனும் மூன்றுமாகும். இம்மூன்றும் அநாதியானவை என்பதைச் சைவ சித்தாந்தம் வலியுறுத்துகின்றது. இதனைத் திருமந்திரம்,

> "அறிவறிவென்ற அறிவு மனாதி
> அறிவுக் அறிவாம் பதியும் அனாதி
> அறிவினைக் கட்டிய பாசம் அனாதி...."

என்கிறது. முப்பொருட்களில் உயிர்களைப் பந்தித்து நிற்பவை பாசம் என அழைக்கப்படுகிறது. இதை மும்மலம் என்றும் சொல்லுவதுண்டு. மும்மலங்களாவன ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும்.

## சைவ சித்தாந்தம் கூறும் ஆணவம்

ஆணவம் என்ற சொல்லுக்கு அணுத்தன்மை செய்வது என்பது பொருள். அதாவது உயிர்களின் அறிவு, இச்சை, செயல் என்பவற்றை அறியவிடாமல் அணுத்தன்மைப்படுத்தும் (சிறுமைப்படுத்தும்) மலசக்தி ஆணவம் எனப்படுகிறது. ஆணவம் உயிரை அணுத்தன்மைப்படுத்தலை பிரதிபந்தம் என்பர். கன்மம் என்பது ஆணவத்தினால் விளைந்த யான், எனது என்னும் செருக்கினால் உயிரை வந்து பற்றுவது. இது ஆன்மாவின் அறிவை வீடுபேற்றை நோக்கிச் செல்லவிடாமல் போக மலத்தின் வழியாக வருவதால் இதனை அனுபந்தம் என்பர். மாயை என்னும் மலம் ஆன்மாவின் முற்றறிவைத் தடுத்து மயக்கத்தைத் தருவது. இது கன்மத்தோடு தொடர்புடையது ஆதலால் அதனைச் சம்பந்தம் என்பர்.

### ஆணவத்தின் மறுபெயர்கள்

அஞ்ஞானம், ஆவிருதி, தளை, தடை, சகசமலம், இருள்மலம், பிணி, ஆசு, மூலமலம், எனப் பல்வேறு பெயர்களால் ஆணவம் அழைக்கப்படுகிறது.

- சகசம் என்னும் சொல் உடன் தோன்றுவது என்னும் பொருளைத் தரும். ஆன்மா என்று தோன்றிற்றோ அன்றே ஆணவமும் அதனுடன் தோன்றிற்று. அதனால் அது சகசமலம் எனப்பட்டது.

- ஆணவமல நீக்கத்தின் பொருட்டே மாயை, கன்மம், முதலான மலங்கள் ஆன்மாவிடத்து வந்து சேர்வதனாலும் ஆணவம் உடன் உறைவதனாலும் ஆணவம் மூலமலம் எனப்பட்டது.
- அறியாமையே வடிவமாக நிற்றலால் இது இருள்மலம் என அழைக்கப்படுகிறது.

**ஆணவத்தின் இயல்புகள்**

ஆன்மாக்களோடு ஆணவம் சேர்வதால் ஆணவத்தின் இயல்புத் தன்மைக்கு ஏற்ப சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர், என மூவகைப்படுவர். ஆணவமலம் மாத்திரம் உடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும், ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களுடையவர் பிரளயாகலர் எனவும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களுடையவர் சகலர் எனவும் அழைக்கப்படுவர்.
ஆணவத்துக்கு இருவகை இயல்புகள் உண்டெனச் சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. அவையாவன

- தன் இயல்பு
- பொது இயல்பு

**தன் இயல்பு**

பொருட்கள் இருக்கின்றன என்னும் தன்மையை அறியவிடாமல் கண்ணை மறைக்கும் இருள் போல அறிவைச் சிறிதும் செயல்படவிடாது தடுத்து அறியாமையே வடிவாகச் செய்யும் நிலை ஆணவத்தின் தன்னியல்பு ஆகும். உமாபதிசிவாச்சாரியார் ஆணவத்தின் தன் இயல்பைச் சிறப்பாக உவமைகளோடு எடுத்து விளக்குவார்.

உலகிலுள்ள பல்வகைப் பொருட்களின் தன்மை புலப்படுத்தப்படாதவாறு ஒரே பொருளாகக் காட்டிநிற்கும் தன்மை இருளுக்குரியது. அதாவது இருள் பிற பொருட்களை அறியவிடாமல் அவற்றை மறைத்து தன்னையே காட்டி நிற்கும். ஆனால் ஆணவமோ தன்னையும் காட்டாது பிறவற்றையும் காட்டாது. இதனைத் திருவருட்பயன்,

“ஒருபொருளும் காட்டா திருளுருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாதிது“

என்கிறது.

**பொது இயல்பு**

மாயை கன்மங்களோடு சேர்ந்து நின்று தடுக்கும் போது மங்கலான ஒளியில் கண் தவறாகக் காண்பது போல பொருட்களின் இயல்பை அறிவினால் உணரச் செய்யும் நிலை பொது இயல்பு எனப்படும். (திரிபுணர்ச்சி). இதனை ‘அதோநியாமிகா சக்தி நிலை’ எனக் குறிப்பிடுவர். பிற பொருட்களுடன் சேர்ந்து நின்று உயிர்களின் அறிவுநிலையைக் கீழ் நோக்கிச் செலுத்தி நிற்கும் நிலையாகும். இதனால் ஆன்மாக்கள் பல்வேறு விருப்பு வெறுப்புக்களுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் உட்படுகின்றன.

**எண் குணங்கள்**

பதியாகிய இறைவனுக்கு எண்குணங்களைக் கற்பிக்கின்ற சைவசித்தாந்தம் ஆணவத்திற்கும் எண் குணங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. அவை வருமாறு:

1. விகற்பம் - தன்னை விட பிறர் ஒவ்வாதெனல்
2. கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்
3. குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்
4. மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படுதல்
5. கொலை - உயிர்களைக் கொல்லுதல்
6. அஞர் - துக்கப்படல்
7. மதம் - அகங்காரம் மேலிடல்
8. நகை - சிரிப்பு

மேற்குறித்த எண்குணங்களை உடைய ஆணவம் ஒன்றா, பலவா எனின் ஒன்றே என்பது சைவசித்தாந்திகளது நிலைப்பாடு. ஆணவம் ஒன்றாயினும் அதற்கு பல சக்திகள் உண்டு. ஆணவத்தின் தன்மைகளை விளக்க வந்த அருணந்திசிவாச்சாரியார் பின்வருமாறு கூறுகின்றார். இதனை,

> "ஒன்றதாய் அநேக சக்தியுடையதாய் உடனாய் ஆதி
> யன்றதாய், ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
> நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து
> என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே"

எனும் சிவஞானசித்தியார் பாடலில் காணலாம்.

**ஆணவமும் ஏனைய மலங்களும்**

ஆணவம் கண்களை மறைக்கும் படலத்தைப் போல உயிரைக் குருடாக்கின்றது. அக் குருடனுக்கு ஓரளவு துணை செய்யும் ஊன்று கோல் போல இறைவன் மாயை, கன்மமலங்களை உயிர்களுக்கு ஊட்டுகின்றான் இங்கே இறைவன் மாயை, கன்ம ஆகிய மலங்களை ஊட்டுகின்றான் என்பது மாயையின் காரியங்களாகிய தனு கரண புவனம் போகம் ஆகியவற்றால் ஆன்மாவானது தனது அறிவை விளக்கம் செய்து கொள்கின்றது என்பதையே குறிக்கும்.

அம்மாயையின் காரியங்கள் புதிய வினைகளை, கன்மங்களைச் செய்யத் தூண்டுகின்றது. ஆன்மா மாயையின் காரியங்களையும் குணவியல்புகளையும் அடிப்படையாகக் கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைச் சாதனைகளைப் புரிவதன் மூலமே பசு நல்வினையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### வீடுபேற்று நிலையில் ஆணவம்

ஆணவத்துக்கு அழிவில்லையாயினும் அதன் சக்தி காலப்போக்கில் குறைவடைகின்றது. ஆணவம் சடமாதலால் இது சாத்தியமாகின்றது. அதாவது சடப்பொருட்களுக்குத் தேய்வு உண்டாதல் இயற்கை. ஆதலால் வலிதாய் முன்பு உயிரின் அறிவை மறைத்து நின்ற ஆணவத்தின் வலிமை குறைவடைந்துவிடுகிறது. இதனை மலபரிபாகம் என்பர். இந்நிலையில் ஆணவம் இருந்தும் இல்லாதது போல் ஆகும். அது "வறுத்த வித்துப்போல்" மீண்டும் முளைத்தலின்றி வலி இழக்கிறது.

இறைவன் நன்மையின் குறியீடு என்றால் ஆணவம் தீமையின் குறியீடாகக் காணப்படுகின்றது. நன்மையும் தீமையும் எல்லா உயிர்களிலும் விரவியே நீக்கமற நிறைந்துள்ளன. ஒன்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது ஆன்மாவின் இயல்பு. தீமையின் சின்னமான ஆணவத்திற்கு ஆட்பட்டால் தீய விளைவுகளைப் பெற்றுத் துன்பப்படும். நன்மையின் அடையாளமான இறைவனைச் சார்ந்து அவனையே பற்றுக்கோடாகச் சிக்கெனப் பிடித்தால் இறைமைக் குணங்களில் திளைக்கும். "ஆணவத்தோடத்துவித மானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதஞ் சாரும் நாள் எந்நாளோ" எனத் தாயுமானவ சுவாமிகளும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சைவ சித்தாந்தம் கூறும் கன்மம்

இந்தியத் தத்துவக் கோட்பாடுகளில் கன்மக்கோட்பாடு என்பது இன்றியமையாததாகும். கன்மம் என்பது வினை என்றும் ஊழ் என்றும் சொல்லப்படும். சைவசமயத்தில் வினைக் கொள்கை பிறசமயக் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டிருக்கிறது. உயிர்கள் வினையை அனுபவித்தே ஆகவேண்டும் என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும். கன்மம், மாயை என்பவை இடையில் வந்து சேருவன ஆகும். எனவே இதனை ஆகந்துக மலம் என்பர். இவ்விரண்டு மலங்களும் ஆணவ மலம் அடங்கும் காலத்து நீங்கிவிடும்.

இந்தக் கன்மமாகிய வினைதான் பிறப்புக்கும், அதன்கண் உளவாகும் இன்ப துன்ப வினைக்கும் காரணமாகும். எனவே உயிர்களின் அறிவை மறைத்தல் ஆணவமலம் என்று கூறுவதுபோல் உயிர்களின் இன்ப துன்பங்களை அனுபவிக்க வைப்பது கன்மம் எனக் குறிப்பிடலாம். வினையானது சடப்பொருள், அறிவற்றது. எனவே செய்தவனைத் தேடி அடையாது. ஆகவே இறைவன்தான் வினைகளை உயிர்களிடத்தில் அடைவித்து இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்கின்றான். ஒரு பிறப்பில் செய்த நல்வினை, தீவினை அடுத்தடுத்த பிறப்பில் நன்மை

தீமைகளைச் செய்வதால்தான் வினையை ஊழ்வினை என்கின்றனர். நல்வினை, தீவினை இரண்டுமே பிறப்பைத் தரும் என்பது உணரத்தக்கது.

'கன்மம்' பற்றி திருமூலர் வரையறை செய்யும் போது, "பிறவிக்கு காரணமாக அமைவதாகவும் பிறவித் துன்பத்திலிருந்து விடுபட உதவுவதாகவும் அமைவது கன்மம்" என்கிறார்.

''கருமங்கள் ஒன்று கருதும் கருமத்(து)
உரிமையும் கன்மமும் உன்னும் பிறவிக்
கருவினை யாவதும் கண்டகன்(று) அன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுத்துமே'' - திருமந்திரம்

செய்யும் செயல்களால் வரும் வினைகள் பிறவிக்கு காரணமாக அமைகின்றன. இருந்தபோதிலும் உயிர்கள் செய்யும் செயல்கள் மூலம் இந்த கருமவினைகளில் இருந்து விடுபடவும் முடியும்.

''உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினைஇந்த உடல்வி ளைக்கும்
தொடர்ச்சியால் ஒன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதி வித்தின்
இடத்தினின் மரம்ம ரத்தின் வித்தும்வந் தியையு மாபோல்'' சிவஞான சித்தியார்

உடலின் செயல்களால் வரும் கன்மம் தொடர்ச்சியாய் உயிர்களை தொடரும். இது விதையில் மரமும் மரத்தில் விதையும் வருவது போலாகும் என பொருத்தமான உதாரணத்தின் மூலம் சிவஞான சித்தியார் விளக்குகின்றது.

**உயிருடன் கன்மம் கொண்டுள்ள தொடர்பு**

உயிருக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு அநாதியானது. இத்தொடர்பினை தெளிவுபடுத்த சில உதாரணங்களை சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டுகின்றது. இதனை,

''ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைஅத் தவிடுமி ஆன்மாவும்
தாணுவைப் போலாமல் தண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே''

எனுஞ் செய்யுளில் காணலாம். அதாவது, மும்மலங்களும் முறையே அரிசிக்கு முளை, தவிடு, உமி போல் இருக்கின்றன. முதலில் தவிடு, அதற்கும் கீழ் உமி, அதற்கும் கீழ் முளை. இப்படியாக ஆன்மாவை சுற்றி இவை மறைத்து இருக்கின்றன என்கிறார்.

**மூவகை கன்மங்கள்**

சைவசித்தாந்தம் மூவகை கன்மம் பற்றி தன் கோட்பாட்டில் தெளிவாக வெளிப்படுத்தியது. மூவகைக் கன்மங்களாவன:

1. சஞ்சித வினை - எஞ்சியுள்ள வினைத் தொகுதி. அதாவது முற்பிறப்புகளில் உயிரால் செய்து ஈட்டப் பெற்ற நல்வினை, தீவினை இரண்டும் சஞ்சிதம் (பழவினை) எனப்படும்.
2. பிராரத்தம் - இப்பிறவியிலே அனுபவிப்பதற்கென்று எடுத்துக் கொள்வது. (நுகர்வினை)
3. ஆகாமியம் - புதிதாக வந்து சேர்பவை. அதாவது இப்பிறவியில் செய்கின்ற அறம், பாவங்களால் மேலும் ஏற்படுகின்ற வினை ஆகாமியம் (ஏதுவினை) எனப்படும்.

திருமந்திரத்தின்,

''தான் முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான் முன்னஞ் செய்தங்கு வைத்ததோர்''[11]

(திருமந்திரம்: 2367)

எனுஞ் செய்யுள் மூவகைக் கன்மம் பற்றி கூறுகின்றது. திருமந்திரத்தில் இடம்பெறும்,

''நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்''[12] (திருமந்திரம்:2573)

எனுஞ் செய்யுளடியில் குறிப்பிடப்படும் ''நின்றவினை'' என்ற பதம் சஞ்சிதவினையைக் குறித்து நிற்கின்றது. இதுபோல்,

''தீயவை தார்மின்கள் சேரும் வினைதனை''[13] (திருமந்திரம்:416)

என்பதில் வந்துள்ள சேரும் வினை ஆகாமிய வினையைக் குறிக்கின்றது. அதாவது இப்பிறவியிலே ஈட்டப்படுகின்ற வினையாதலால் அது புதிய வினையாக கருதப்பட்டு 'சேரும் வினை'யென திருமூலரால் பெயரிட்டழைக்கப்படுகின்றது.

சஞ்சித வினைகளின் ஒரு பகுதியாகிய பிரார்த்தத்தை அனுபவித்து விட்டு ஆகாமிய வினைகள் வராமல் தடுத்து விட்டால் பிறவித் துன்பம் நீங்கி விடும். இதனை ஒரு அழகான உவமை மூலம் காட்டுகின்றது திருமந்திரம்.

''ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தம்

தீமேவு பல்கரணங்களும் உற்றன
தாமேழ் பிறப்பரி சார்ந்த வித்தாமே’’[14] (திருமந்திரம்:120)

அதாவது நம்முடைய செயல்களில் தீவனைகள் நிறையக் கலந்துள்ளன. பசும்பாலில் உள்ள நீரைப் பிரிக்கும் அன்னப்பறவையைப் போல, சிவபெருமான் சிதம்பரத்தில் உள்ள கனகசபையில் தன்னுடைய ஒப்பில்லாத நடனத்தினால் நம்முடைய தீய வினைகளைப் பிரித்து விடுகின்றான். நம்முடைய பிறப்புகளுக்கு காரணமான தீய வினைகள் வறுக்கப்பட்ட வித்துக்களாகி விடுகின்றன. வறுக்கப்பட்ட வித்துக்கள் முளைக்காது. அதுபோல் மறுபிறவி என்பது இராது என விபரிக்கிறது திருமந்திரம்.

**கன்மத்தின் குணங்கள்**

கன்மம் ஆறு குணங்களைக் கொண்டது. அவை,

1. இருத்தல்
2. கிடத்தல்
3. இருவினை யியற்றல்
4. விடுத்தல்
5. பரநிந்தை
6. மேவல்

இதனை அருணந்தி சிவாசாரியார்,

‘‘இருத்தலுங் கிடத்தலும் இருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை…..’’

என எடுத்துரைக்கின்றார்.

**வினைகளுக்குச் சொந்தமானவர் அவற்றைச் செய்தவரே**

அவரவர் வினையை அவரவரே உருவாக்கிக் கொள்கின்றனர். ஆதலால் அவரே அதனை அனுபவிக்கவும் தலைப்பட்டவர். இதனை,

‘‘ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறிவாரில்லை’’(திருமந்திரம்:2805)

எனுஞ் செய்யுளில் காணலாம். இங்கு ஆறு – உயிர், ஆற்று நீர் – வினை, மேடு பள்ளங்கள் - வினையின் வகை, அவற்றை ஆறு சுமத்தல் - வினைப்பயன்களை நுகர்தல் என உருவகிக்கப்படுகின்றன. அதவாது ஆற்றுநீர், அதிலுள்ள மேடு, பள்ளங்களை ஆறு சுமப்பதுபோல் வினையினையும், அவற்றின் தன்மைகளையும் ஆன்மாக்களே சுமக்க வேண்டுமென திருமந்திரம் வற்புறுத்தின்றது. புறநானூற்றுச் செய்யுளில் இடம்பெறும்,

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' (புறநானூறு:192)

எனுஞ் செய்யுள் இக்கருத்தினை வற்புறுத்தி நிற்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

**கன்மத்திற்கும் மறுபிறப்புக்கும் உள்ள தொடர்பு**

மனிதன் செய்யும் கன்மத்திற்கேற்ப மறுபிறவி ஏற்படுகின்றது. அதனை ஏற்படுத்தி வைப்பவனாக இறைவன் உள்ளான் என்கிறது திருந்திரம்.

''கூடு கெடின் மற்றோர் கூடு செய்வானுளன்'' (திருமந்திரம்:2808)

இதனை ஒரு உவமை மூலம் தெளிவுபடுத்த முனைகின்றது திருமந்திரம். இயற்கையாகவோ செயற்கையாகவோ நாம் வாழும் வீடு அழியும் போது புதியதோர் வீடு கட்டி அங்கு குடி புகுகின்றோம். அதுபோலவே ஆன்மாக்களும் ஒரு உடல் அழியும் போது மற்றுமொரு உடலை எடுக்கின்றது. அதுவே மறுபிறப்பாக அமைகின்றது.

''வீடு கெடின் மற்றோர் வீடுபுக்கால் ஒக்கும்'' (திருமந்திரம்:2808)

இவ்வாறு ஆன்மாக்களுக்கு மறுபிறப்பில் புது உடல் படைத்தளிக்கப்படினும் ஆருயிர் முன்னியைந்துள்ள பழைய உயிரேயாகும். மழை போன்ற இயற்கை அழிவுகளினால் நாடு சேதமடைகின்ற போதிலும் அந்நாட்டை விட்டுவிட்டு செல்லாமல் இருப்பதுபோல் உயிர்களில் மாற்றம் ஏற்படுவதில்லை என்கிறது திருமந்திரம்.

''நாடு கெடினும் நமர்க்கெடுவாரில்லை'' (திருமந்திரம்:2808)

உயிர்கள் முன்பு செய்த வினைக்கீடாக இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவற்றை உயிர்களின் கருவினுள் அமையப் படைப்பவன் இறைவன் என்கிறது திருமந்திரம். இதனை,

''நின்றுயிராக்கு நிமலன் என்னாருயிர்
ஒன்றுயிராக்கும் அளவை உடலுற

முன்துயராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப்பானே நடுவு நின்றானே'' (திருமந்திரம்: 318)

எனுஞ் செய்யுளிலே விபரிக்கும் திருமந்திரம் உயிர்கள் வினையின் ஆட்சிக்குள்தான் நிற்கும் எனவும் அதனை மாற்றும் மதி இறைவன் ஒருவனுக்கே உள்ளது எனவும் கூறுகின்றது.

''வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தன ஈசனை வேண்டி நின்றானே'' (திருமந்திரம்:958

**வினையினால் ஏற்படும் துன்பம்**

மனிதன் அடையும் துன்பங்கள் யாவும் அவனாலேயே உருவாக்கப்படுகின்றன. மனம், வாக்கு, காயம் ஆகியவற்றினால் மனிதன் வினைகளை உருவாக்கிக் கொள்கின்றான். ஆன்மா மூவகைப்பட வினையீட்டுவதனை திருமந்திரம்,

''மனம் வாக்குக் காயத்தால் வல்வினை மூளும்''
(திருமந்திரம்: 2612)

என உரைக்கின்றது. பொறாமை, கோபம், வெகுளித் தன்மை போன்றவை மனத்தினால் தேடிக் கொள்ளும் தீயவினைகளுள் சிலவாகும். பொய், வன்சொல் பேசல், புறங்கூறல், தீயவற்றை உரையாடுதல் போன்றன வாக்கினால் ஏற்படும் தீவனைகள். காயத்தினால் ஏற்படும் தீவினைகளாக கொலை, களவு, காமம், உயிர்களை துன்புறுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வினைகள் யாவும் மனிதனுக்கு கொடிய துன்பத்தை விளைவிக்கின்றன. இதனை திருமூலரும்,

''அறுத்தன ஆறினும் ஆன்இனம் மேவி
அறத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்'' (திருமந்திரம்: 958

எனுஞ் செய்யுளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

கன்மம் முதலிய பாசங்களால் ஆன்மா இறைவனை அடைய முடிவதில்லை.
ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்குத் தடையாக கன்மம் முதலிய பாசம் இருக்கின்றது. விண்ணில் மேகங்கள் பரந்திருந்தாலும் ஆகாயத்தோடு ஒட்டுவதில்லை. கண்கள் பல காட்சிகளைக் கண்டாலும் கண்ணில் அவை ஒட்டுவதில்லை. ஆனால் கண்கள் அதில் படிகின்றன. அதுபோல எண்ணம் நினைவுக்கு அப்பாலுள்ள இறைவனை அடையமாட்டாது. பாசத்தால் பசுவாகிய ஆன்மா

பசுவுள் பதி இருப்பதை அறியா. இதனால் ஆன்மா பதியை உணரா என தெளிவுறுத்துகிறது திருமந்திரம்.

“விண்ணினைச் சென்று அணுள வியன் மேகங்கள்
கண்ணினைச் சென்று அணுகாப் பல காட்சிகள்
எண்ணினைச் சென்று அணுகாமல் எனப்படும்
அண்ணலைச் சென்று அணுகாப் பசுபாசமே

**வினைப்பயனில் இருந்து நீங்குதல்**

வினைப்பயனில் இருந்து நீங்குதல் என்பது தீயது செய்யாதிருத்தல் அல்ல. பற்றற்று இருத்தலைக் குறிக்கும். இதனை,

“புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சிவஞானிகள்
எண்ணி இரண்டையும் வேரறுத்தப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வீரே” (திருமந்திரம்:367

எனுஞ் செய்யுளில் காணலாம். ஆன்மாக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு தடையாக இருப்பனவற்றுள் கன்மம் முக்கியமானதாகும். இக்கன்மமாகிய வினையினை நீக்கி ஆன்மாக்கள் முத்திநிலையை பெறுவதற்கு பற்றற்ற வினையினைச் செய்தலே சிறந்த வழியென சைவசித்தாந்தம் கூறுகின்றது.

## சைவசித்தாந்தம் கூறும் மாயை

சைவசித்தாந்தத்தின் படி இவ்வுலகம் உண்மையான பொருள். இவ்வுலக படைப்புக் கொள்கையிலே சைவசித்தாந்தம் சற்காரியவாதத்தினை முன்வைக்கின்றது. காரணமும் உண்மை காரியமும் உண்மை என சற்காரியவாதம் கூறுகின்றது. இந்த உலகத்தினை இறைவன் படைத்தார். இதில் இறைவன் காரணப் பொருள். உலகம் காரியப்பொருள். இவையிரண்டும் உண்மையெனக் கூறுவதே சற்காரிய வாதமாகும். இவ்வுலகின் படைப்பில் இறைவன் நிமித்த காரணனாச் செயற்படுகின்றார். துணைக்காரணமாக சக்தியும் முதற் காரணமாக மாயையும் செயற்படுகின்றன. இதனை,

“காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணுமவன்முதல் துணைநி மித்தம்......”

என சிவஞானசித்தியார் கூறுகின்றது. இவ்வுலகப் படைப்பிற்கு மாயை முதற்காரணமாக வைக்கப்படுவதற்கு சைவசித்தாந்திகளால் பின்வரும் காரணம் முன்வைக்கப்படுகின்றது. இறைவன் அறிவே சொரூபமானவர், அழிவற்றவர். ஆனால் இவ்வுலகம் ஒரு சடப்பொருள். அழியக்கூடியது. இவ்வாறு இருக்கையில் இவ்வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது எனக் கூறுவது பொருந்தாது. இதனால் சைவசித்தாந்திகள் இவ்வுலகம் இறைவனால் நேரடியாக உற்பத்தி செய்யப்படாமல் மாயை எனும் மலத்தினால் உற்பத்தி செய்யப்பட்டது எனக் கூறினர். இதனை,

''தோற்றமும் நிலையு மீறும் மாயையின் தொழில தென்றே
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி அணுக்க ளாக.....''

என சிவஞானசித்தியார் கூறுகின்றது. இந்த மாயை உருவமில்லாமல், என்றும் நிலைத்திருப்பது. எங்கும் நிறைந்திருப்பது. இந்த உலகத்துக்கு ஒரு வித்தாக அமைந்தது. இதனை,

''நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர்
வித்துமாய் அசித்தா யெங்கும் வியாபியாய் ...........''

என சைவசித்தாந்தம் கூறுகின்றது.

**முப்பத்தாறு தத்துவங்கள்**

இந்த மாயையிலிருந்து தோன்றும் தத்துவங்கள் 36 ஆகும். இது உலகின் தோற்றம், பிரபஞ்சத்தின் அமைப்பு என்பவற்றை விளக்கும். மாயை, பதியால் இயக்கப்படும் போது, இந்த 36 தத்துவங்களும் படிப்படியாகத் தோன்றுகின்றன. இந்த மாயாமலமானது, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்று மூன்றாகப் பிரிந்து, அவை ஒவ்வொன்றிலுமிருந்து, முறையே ஐந்து, ஏழு, இருபத்து நான்கு என, மொத்தம் முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றுகின்றன. சுத்தமாயையிலிருந்து தோன்றும் ஐந்தையும், ''சிவதத்துவம்'' என்றும், அசுத்தமாயையிலிருந்து தோன்றும் ஏழையும் ''வித்தியாதத்துவம்'' என்றும், பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் இருபத்து நான்கையும் ''ஆன்ம தத்துவம்'' என்றும் வகைப்படுத்துவர்.

''சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகை மையின்இ யம்பும் இவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறாஞ்........''

என சைவசித்தாந்தம் கூறுகின்றது.

**சிவ தத்துவம் - ஐந்து**

1. நாதம் - தூய அறிவாலான பரம்பொருளின் முழுமையான நனவிலி நிலை. இதுவே பரசிவ வடிவம் ஆகும்.
2. விந்து - சக்தி, இயங்கிக் கொண்டிருக்கும் கிரியா சக்தி. அந்த இயக்கத்தாலேயே, சிவத்துடன் இணைந்து ஏனைய தத்துவங்களை உருவாக்க ஆரம்பிக்கும் இறைவனின் திருவருட்சக்தியின் நிலை ஆகும்.
3. சாதாக்கியம் - சதாசிவன். சிவ-சக்தி இணைவால் செயலும், அறிவும் சமநிலையில் காணப்படும். ஏனைய தத்துவங்களின் தோற்றம் தூண்டப்படும்.
4. ஈசுரம் - மறைத்தற் சக்தியான மகேசுரன். செயலற்ற நிலையில் இருக்கும் ஆன்மாக்களை மறைத்தலுக்குள்ளாக்கும் செயல்பாடு ஆரம்பமாக, அதனூடே மறைவாக இறையறிவும் இயங்கிக் கொண்டிருக்கும்.
5. சுத்த வித்தை - படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலுக்கு அடிப்படையான இறைதத்துவம். இதன்போது, இறையறிவு முழுமையாகச் செயற்பட, செயல் (கிரியாசக்தி) பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும்.

உயிர்கள் மீது கருணைகொண்டு, செயலற்று இருக்கும் ”இறை” எனும் கருதுமம், மெல்ல மெல்லக் கீழிறங்கி வருவதை இப்படிநிலை காட்டுகின்றது. ஈசுவர தத்துவமானது, ஈடேறாத ஆன்மாக்களை சுத்த வித்தையில் மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழன்று கொண்டிருக்கச் செய்யும். பக்குவப்பட்ட ஆன்மாக்கள், மேலே சாதாக்கிய தத்துவத்தை அடைந்து மலங்களிலிருந்து விடுதலை பெறும். பின், விந்து தத்துவம் ஆன்மாவை திருவருட்சக்தியில் நனைத்து, முக்திக்கு அழைத்துச் செல்லும். இறுதிப் பரிபூரண நிலையான சிவதத்துவமாம் நாதத்தில், ஆன்மா மோட்சம் பெறும்.

**வித்தியா தத்துவம் ஏழு**

இவை அசுத்த மாயையிலிருந்து தோன்றுபவை. செயலற்று உறங்கும் ஆன்மாக்களின் செயற்பாட்டுக்கான கருவிகளாக வித்தியா தத்துவங்கள் விளங்குகின்றன.

1. காலம்
2. நியதி
3. கலை
4. வித்தை
5. இராகம்
6. மாயம் எனும் கஞ்சுகங்கள் ஆறுடன்,
7. ஆன்மா (புருடன்)

   ஒன்றும் சேர்ந்து, வித்தியா தத்துவங்கள் ஏழு ஆகின்றன.

இந்த வித்தியா தத்துவங்கள் தொழிற்படுவதற்கு, சிவ தத்துவங்கள் அவசியமாகும். காலம், நியதி, கலை எனும் மூன்றும் விந்தினாலும், வித்தை, சுத்த வித்தையாலும், இராகம் ஈசுரனாலும், மாயம் நாதத்தினாலும், புருடன் சதாசிவத்தினாலும் இயக்கப்படுகின்றன.

**ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு**

இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களுமே, உலகத்தினதும் உயிர்களினதும் அடிப்படை ஆகும். சிவதத்துவத்தால், வித்தியா தத்துவம் தூண்டப்பட்டு, ஆன்மா இயங்குவதற்கான கருவிகள் வழங்கப்பட்டால் மட்டும் போதாது. அவ்வாறு இயக்கப்படுவற்கான பௌதிக உடலையும் அதுசார்ந்த பொறிகளும் ஆன்மாக்கு அவசியமாகின்றன. பஞ்சபூதங்களும், ஐம்பொறிகளும் இன்னும் ஒன்பது கருவிகளும், வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஆன்ம தத்துவத்தில் அடக்கப்பட்டிருக்கின்றன.

- மாபூதங்கள் ஐந்து
    1. நிலம்
    2. காற்று
    3. நீர்
    4. தீ
    5. ஆகாயம்

ஆகிய ஐம்பருக்களும் ஆகும். மனித உடல் ஐம்பருக்களால் ஆனது என்கிறது சைவசித்தாந்தம்.

- தன்மாத்திரைகள் ஐந்து
    1. சுவை
    2. ஒளி
    3. ஊறு (தொடுகை)
    4. ஓசை
    5. நாற்றம் (மணம்)
- கன்மேந்திரியம் ஐந்து
    1. பற்றுதல் (பாணி)
    2. பதித்தல் (பாதம்)
    3. படைத்தல் (உபத்தம்)
    4. பலுக்கல் (வாக்கு)
    5. கழித்தல் (பாயு)

எனும் ஐந்தும் ஆகும். கன்மம் என்றால் செயல். மனித உடல் செய்யும் ஐந்து செயல்களையும் கன்மேந்திரியமாக வகைப்படுத்தப்படுகின்றன. பற்றும் செயலைக் கையும், (கால்) பதித்தலை பாதங்களும், ஆக்கத்திறனுடன் படைத்தலை மூளையும், பலுக்கும் (பேசும்) செயலை நாக்கும், கழிக்கும் தொழிலை கழித்தல் அங்கங்களும் செய்கின்றன. இவை ஐந்தும் ஆன்மா, உடலில் இயங்க அவசியமாகும்.

- ஞானேந்திரியம் ஐந்து
    1. மெய்
    2. வாய்
    3. கண்
    4. மூக்கு
    5. செவி

எனும் ஐம்பொறிகளும் ஞானேந்திரியம் ஆகும். இவ்வைந்தும் ஒன்றோடொன்று இணைந்து செயல்புரிவதாலேயே, உயிர்கள் அறிவைப் பகுத்தறிந்து மெல்ல மெல்ல மேனிலையை அடைகின்றன.

- அந்தக்கரணங்கள் நான்கு
    1. மனம்
    2. புத்தி
    3. அகங்காரம்
    4. சித்தம்

சித்தத்தைப் "பிரகிருதி" என்றும் அழைப்பதுண்டு. எனவே தான், சித்தத்தை முதலாகக் கொண்ட இந்த இருபத்து ஆன்ம தத்துவங்களும் "பிரகிருதி மாயா தத்துவங்கள்" எனப்படுகின்றன. இப்பிரகிருதியுடன் புருடனான ஆன்மா (வித்தியா தத்துவங்களுள் ஒன்று) இணையும் போதே, ஏனைய தத்துவங்களுடன் இணைந்து, இப்பௌதிக உலகில் செயலாற்ற ஆரம்பிக்கின்றதுஜ7ஸ என்பது சைவ சித்தாந்தத்தின் முடிபாகும். இதனை,

> ‘‘……………………………………..விமல னுக்கோர்
> சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமும்உ யிர்க்காய்
> வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே’’

எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

சைவசித்தாந்தம் மாயையை ஆன்ம விடுதலைக்கு உதவுகின்ற ஒரு சடப்பொருளாக உரைக்கின்றது. ஆன்மாக்கள் இவ்வுலகில் பற்றற்ற வினைகளைச் செய்து முத்தியடைவதற்காக மாயை மூலமாக பஞ்ச பூதங்கள், அகக்கருவிகள், புறக்கருவிகள் படைக்கப்படுவதால் இந்த மாயை ஆன்மாக்களுக்கு இருளைப் போக்கும் ஒரு விளக்கு போல உதவி செய்வதாக சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதனை திருவருட்பயன்,

> ‘‘விடிவாமளவும் விளக்கனைய மாயை
> வடிவாதி கன்மத்து வந்து’’

இவ்வாறு சைவசித்தாந்தம் மாயை இப்பிரபஞ்த்தின் முதற்காரணமாகவும், ஆன்மாக்களின் முத்திக்குரிய காரணமாகவும் முன்வைக்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. கந்தசாமி. ந. செ., (2003), **இந்திய தத்துவக்களஞ்சியம்,** சிதம்பரம்:மெய்யப்பன் பதிப்பகம்.
2. கலைவாணி. இராமநாதன்., (2011), **இந்திய மெய்யியல் சிந்தனையில் வேதாந்தம் - சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை,** கொழும்பு:குமரன் புத்தக இல்லம்.
3. சுகிர்தராஜ்,ஜெ., (2012), இந்து தத்துவ மரபில் விசிட்டாத்வைதத்தினதும் சைவ சித்தாந்தத்தினதும் இறைக்கொள்கை''- ஓர் ஒப்பு நோக்கு (கலைமாணி ஆய்வு நூல்), மொழித்துறை கலை, கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
4. தேவிபிரசாத். சட்டோபத்யாயா., (2008), **இந்திய தத்துவம் ஓர் அறிமுகம்**, சென்னை:படைப்பாளிகள் பதிப்பகம்.
5. மகாதேவன். ரி.எம்.பி., (2006), **இந்துசமயத் தத்துவம்,** இலங்கை: குமரன் புத்தக இல்லம்.
6. மணி,சி.சு., (1993), **மெய்கண்ட நூல்கள் ஏழு**, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்பகம்.
7. லக்ஷ்மணன்.கி., (2006), **இந்திய தத்துவஞானம்,** சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.